# பிரேம வாஹினி

பகவான்

ஸ்ரீ சத்ய சாயி பாபா

22. Seek knowledge of the Eternal Truth

**சனாதனக் கல்வியின் அவசியம்:**

மனிதன் பயிற்சிபெறாத கலை, திறன், விஞ்ஞானம் இருக்கிறதா? பெற்ற பயிற்சி ஏராளம்... ஏராளம்! அவன் உருவாக்காத யந்திரங்களா? அவையும் ஏராளம்! அவன் கல்லாத கல்வியா? கணக்கே இல்லை. இருப்பினும் மகிழ்ச்சிக்கு இன்றியமையாத மன அமைதி மனிதனிடம் இல்லையே. அதற்கு மாறாக இன்றைய கல்வி ஒவ்வொரு நாளும் மனிதனை நீரின் ஆழத்துக்கு அதிக ஆழத்துக்கல்லவா இழுத்துச் செல்கிறது; அது அமைதியை அவனிடமிருந்து வெகுதூரம் விலகவைக்கிறது.

அதற்குரிய காரணத்தைப் பின்வருமாறு கூறலாம். இந்த கலைகளும் விஞ்ஞானங்களும் தற்காலிக மதிப்பு உடையவை; இந்த யந்திரங்கள் உலக சுகத்துக்கு உருவாக்கப்பட்டவை. இந்த அறிவனைத்தும் தற்காலிகமானவையே. இந்தக் கல்வி பிரபஞ்சத்தின் அதீதமான ரகசியத்தை வெளிப்படுத்துவதில்லை. எல்லா ரகசியங்களையும் அறிந்து கொள்வதற்குரிய ரகசியம் ஒன்று இருக்கிறது; அந்தச் சிக்கலைத் தீர்த்துவிட்டால் அனைத்துக்கும் தீர்வு காணப்படும். அந்த ஒரு முடிச்சை அவிழ்த்து விட்டால் அனைத்து முடிச்சுகளும் அவிழ்ந்துவிடும்; அந்த விஞ்ஞானத்தில் மேதையாகிவிட்டால் ஒருவர் அனைத்திலும் மேதையாகி விடலாம். அந்த விஞ்ஞானத்தின் திறவுகோல் சனாதனக் கல்வியே.

ஒரு மரத்தை வெட்டி சாய்க்க வேண்டுமெனில் அதன் ஆணிவேரை வெட்டியாக வேண்டும்; ஒவ்வொரு இலையாகப் பறிப்பதில் பயன் இல்லை. அப்படிச் செய்தால் அதற்கு நெடுநேரம் ஆவதுடன் காரியமும் நிறைவேறாது. தொன்மையான வேதகால முனிவர்கள் இந்தக் கல்வியை அறிந்திருந்தனர். ஆனால் இந்தியர்கள் அவர்களின் சந்ததிகள் என்று கூறிக்கொள்ள வெட்கப்படுகிறார்கள். அவர்கள் யோக சாதனைகள் மூலம் இறைவனைப் பார்த்தவர்கள்; அதன் மூலம் அவருடைய திருவருளையும் பெற்றவர்கள். அந்த விஞ்ஞானத்தை விடா முயற்சியுடன் அவர்கள் கண்டுபிடித்தனர். அதை விளக்கமாக எடுத்துரைக்கவும் செய்தனர். இந்நூல்களைத் தொடர்ந்து கற்ற பிற நாட்டுச் சாதகர்கள் " உலகம் முழுவதும் ஒளிகாட்டும் முயற்சியில் இந்தியா முன்னணியில் இருந்தது" என்று சொன்னார்கள். இது எல்லாருக்கும் தெரிந்த உண்மை. விளக்கு வீட்டுக்கு ஒளி அளிக்கிறது. ஆனால் அதன் காலடியில் இருள் சூழ்ந்திருக்கிறது. அப்படிப்பட்ட புதையல் குறித்து இந்தியாவிற்குத் தெரியவில்லை; தெரிந்து கொள்ளும் அக்கறையும் இல்லை. இதை, விதியின் விளையாட்டு என்று சொல்லிவிட்டு மௌனமாக இருக்க முடியுமா?

23, Don't neglect the study of Sanskrit and Vedic Culture

## வேதங்கள், உபநிடதங்கள் கற்பதை தவிர்க்காதீர்கள்

கடந்த யுகங்களில் இந்தியர்கள் வேதங்கள், உபநிடதங்களில் கற்றவற்றைப் பின்பற்றினர். அவர்கள் கற்பதில் அமிழ்ந்து விடுவர்; தூய்மையான இடத்தில் புனிதமான சூழலில் அமர்ந்து தினசரிச் சடங்குகளைச் செய்தனர். அத்துடன் மற்றவர்களுக்கு உதவும் வகையிலும் தங்கள் அனுபவங்களைப் பதிவுசெய்து வைத்தனர். ஆனால் அவர்களுடைய பிள்ளைகளும், பேரக்குழந்தைகளும் அந்நூல்களை பரண் மீது வைத்துவிட்டு வழிபட ஆரம்பித்தனர்; அவர்களுடைய அசட்டை காரணமாக அவைகள் தூசு படிந்து குப்பையாகி விட்டன. அந்தப் பனை ஓலைகள் சிதைந்து, எலிகளால் தின்னப்பட்டு விட்டன. ஆனால் மேலை நாட்டுச் சீடர்கள் இந்த குப்பைகளைத் தேடி ஆவலுடன் வந்தனர். ஒப்புவமையிலா விலைமதிப்பில்லா பிரகாசம் மிக்க ஒளி முத்துக்கள் அவற்றுள் புதைந்துள்ளன என்பதை உணர்ந்தனர்; பரதக் கண்டம் தங்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்கும் அளித்த விலைமதிப்பிலா வெகுமதி எனக்கருதி மிக்க மரியாதையுடன் தலையில் சுமந்து சென்றனர். கண்களில் ஆனந்த நீர்வழிய, இதயத்தில் நன்றி நீர் ததும்ப அவற்றை அவர்கள் கடல் கடந்து கொண்டு சென்றனர்.

இப்போது இந்தியக் குழந்தைகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லட்டுமா? புத்தகங்களைத் திறப்பதுமில்லை; பின்பற்றுவதுமில்லை; அதைப் பற்றி ஒருபோதும் கவலைப்படுவதுமில்லை. லட்சத்தில் ஒருவர் படிக்கிறார். படிக்கும் அந்த ஒருவனையும் முட்டாள், பைத்தியம் என்று ஏளனம் செய்கின்றனர். அந்த நூல்களைப் பொய்யும், கற்பனையும் கலந்த புளுகு மூட்டை என்று எள்ளி நகைக்கின்றனர்; அவற்றின் ஆசிரியர்களையும் வரலாறுகளையும் பற்றி வாதமிடுகின்றனர். வடமொழி கற்பதற்குக் கடினமாக இருக்கிறது என்று அதை ஒதுக்குகின்றனர். ஆனால் பிற நாட்டு அறிஞர்களை புதையலாக மதித்துப் போற்றுகின்றனர். எத்தனை வருத்ததிற்குரிய பரிதாபம் இது! அதற்கு பதிலாக அவர்கள் தங்கள் தாய்மொழியைக் கவனத்துடன் கற்றிருந்தால் அது சிறிது பரிகாரமாகவேனும் இருந்திருக்கும்; அப்படியும் செய்யவில்லை; அசட்டை; அசட்டை; ஒரே அசட்டை! எல்லா இடத்திலும் அசட்டை!

உலக சுகங்களை அனுபவிப்பதை நான் கண்டிப்பதில்லை. மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்கும்போது நான் மகிழ்கிறேன். ஆனால் தயவுசெய்து இந்த மகிழ்ச்சி நிலையானது என்று நம்ப வேண்டாம். உலக மகிழ்ச்சியைத் தரும் கலைகளை, விஞ்ஞானங்களை நீங்கள் கற்கவேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். ஆனால் இந்த மகிழ்ச்சி தற்காலிகமானதே என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும் என்பதே என் விருப்பம்.

ஒரே ஒரு கல்வியால் உபநிடதகல்வியால் மட்டுமே நிரந்தர மகிழ்ச்சி கிட்டும்; அதுதான் இறைவனை உணர்த்தும் விஞ்ஞானம்; ரிஷிகள் போதித்தது அந்த விஞ்ஞானத்தைதான். அது ஒன்றுதான் மனிதனைக் காப்பாற்றும்; சாந்தி அளிக்கும்; அதைவிட உயர்ந்தது எதுவுமில்லை; இது வாதத்திற்கு அப்பாற்பட்ட உண்மை. வாழ்க்கைக்காக ஒரு துறையில் நீங்கள் தேர்ச்சி பெற்றிருக்கலாம். அது எத்துறையாக இருப்பினும், இன்பமோ, துன்பமோ எந்நிலையில் இருப்பினும் உங்கள் விழிகள் பிரம்ம வித்தையில் (கல்வியில்) மையம் கொள்ளட்டும். ஒழுக்கமில்லாத வெறும் மதிநுட்பத்தால், குவிந்துள்ள செய்திகளால் உலகம் முன்னேறாது. அதன் நலம் சின்னாபின்னமாகிவிடும்.

ஆனால் மக்கள் இப்போது ஒழுக்கத்தில் நம்பிக்கை இழப்பதாகத் தோன்றுகிறது; ஏனெனில் ஆன்மீக போதனைக்கு அல்லது பயிற்சிக்கு இன்றைய கல்வித்திட்டத்தில் சிறிது இடம்கூட ஒதுக்கப்படவில்லை. உண்மையான கல்வி வெறும் செய்திகளை மூளையில் குவிப்பதுடன் திருப்தி்பட்டுவிடக் கூடாது. அனைத்து ஒழுக்கங்களையும் முழு அளவில் மலர வைக்கும் கல்வி ஒன்றே நன்மை நல்கும். மனிதனைச் சிறப்பிக்கும்.

**24. Don’t Mistake appearance for reality**

## இந்தப் பூவுலகு நிலையானதல்ல:

உண்மையில் மனிதர்கள் பார்ப்பது நிழலைத்தான். ஆனால் அதை நிஜம் என்று நம்புகிறார்கள். நீளம், அகலம், உயரம் கனத்தைப் பார்த்தவுடன் அது ஒரு பொருள் என்ற முடிவுக்கு வந்து விடுகிறார்கள். அவர்கள் தொடர்ச்சியாக புலன் உணர்வுகளையும் நினைவுகளையும் ஒருசேர அனுபவிக்கின்றனர்; அந்த அனுபவங்களை அப்பொருள்கள் தருவதாக அனுமானிக்கின்றனர். இப்படியாகத் தோற்றத்தை உண்மை எனக் கணித்து அதைத் தவறுதலாக ஞானம் என்றனர். அது எப்படி ஞானமாகும்? ஒரு போதுமாகாது. ஒருவனின் நிழல் அவனாகிவிடுமா? நிழலை அவனாகக் கருதுவதை அறிவு என்று நாம் எப்படிக் கூற முடியும்? இன்றைய அறிவு அனைத்தின் இயல்பும் இப்படித்தான் இருக்கிறது. எது பொருளாகப் புலப்படுகிறதோ அது உண்மையே இல்லை. அந்த உண்மையை புலன்களால் எட்ட இயலாது.

அத்வைதி “ நான் பிரம்மம் “ (அஹம் பிரஹ்மாஸ்மி) என்பதை நம்புகிறவன். அந்த முடிவுக்கு அவன் எப்படி வந்தான்? அவன் ஏன் அப்படி சொல்கிறான்? அவனைக் கேட்டால், “வேதம் அப்படி முழங்குகிறது; குரு அப்படி போதித்தார்” என்று பதில் அளிப்பான். ஆனால் அவற்றை அப்படி வெறுமனே கற்றவுடன் அப்படிப்பட்ட மகா வாக்யத்தை முழங்க முடியுமா? அஹம், பிரம்மம், அஸ்மி இந்த மூன்று சொற்களுக்கும் பொருள் புரிந்தவுடன் ஒருவன் பிரம்மத்துடன்

ஐக்கியமாகி விடுவானா? முடியாது. எண்ணற்ற பிறவிகளில் இடைவிடாமல், ஈடுபாட்டுடன் சாத்திர முறைப்படி கடமை ஆற்றினால்தான் மனம் தூய்மை அடையும்; அப்படிப்பட்ட மனதில் பக்தி விதைகள் முளைக்கும். அதைப் பரிவுடன் அறிவுடன் பேணினால் பூக்கள் மலரும்; கனிகள் தோன்றும்; அவை பழுத்தபின் அதில் மணமும் இனிமையும் நிரம்பியிருக்கும். அந்த ஞானக்கனியை உண்பவன் அதி உன்னதமான நிலையான, ஆனந்தமான, பேரறிவு மிக்க, எல்லாப்பொருள்களிலும் சமயங்களிலும் ஊடுருவி நிற்கும் ஆற்றலுடன் ஐக்கியமாகி விடுகிறான்.

அகம் பிரஹ்மாஸ்மி எனும் சாம்யத்தை ஒருவர் தெளிவாக விளக்கலாம்; அவரது சொல்லாட்சித் திறன் பிரமாதமாக இருக்கலாம்; ஆனால் அவன் உலகை அறியாது 'நான்' என்பதையும் தெரியாது இருப்பானாகில் அவனது 'பிரம்மம்' முழு இருளாகவே இருக்கும்; ஞானி அனுபவிக்கும் அந்த அரிய இன்பத்தை அவன் எப்போதேனும் சுவைக்க முடியுமா? சொற்களிலும் அவற்றின் பொருளிலும் ஒருவன் தேர்ச்சி பெறுவது கணக்கில் வராது; விழிப்புணர்வும் அனுபூதியும் தான் அடிப்படையானவை.

25. Understand that the objective world is as unreal as the dream world

## கனவுலகைப் போல் நனவுலகும் பொய்யானதுதான்

மண்தான் உண்மையானது. மண்ணைப் பானையாக உணர்வது அறியாமையால் எழுவது; மண் அடிப்படையானது. அதுதான் பானையாவதற்குரிய பொருள். மண் இல்லாமல் பானை எப்படி உருவாகும்? காரணம் இல்லாமல் காரியம் எப்படி நடக்கும்? அறியாமையால் இந்த உலகு பலவாறாகத் தோன்றுகிறது. ஞானிக்கு பிரம்மம் மட்டுமே இருக்கிறது; மற்றவையெல்லாம் பிரம்மத்திலிருந்து உருவான வெறும் தோற்றங்களே; அவரால் உணரப்படுவது ஆத்மா ஒன்றே; அப்போது அங்கே மற்றவை இருக்காது; இதுதான் அத்வைத அனுபவம் (அனுபூதி)

உலகம் உண்மையானால் கனவற்ற ஆழ்ந்த உறக்கத்திலும் அது உணரப்படவேண்டும்; ஆனால் அப்போது நமக்கு எதுவுமே தெரிவதில்லை. எனவே கனவுலகைப் போலவே நனவுலகும் பொய்யானதுதான். மயக்கத்தால் கயிறு. பாம்பாகக் காட்சி அளிப்பதைப் போன்று பிரம்மம் உலகாகக் காட்சி அளிக்கிறது. ஒரே நேரத்தில் கயிறும் பாம்பும் பார்க்கப்படுவதில்லை; முழுமையான கயிறு அப்போது பாம்பாக இருக்கிறது. அதைப் போலவே இவ்வுலகு அனைத்தும், எண்ணிலா நாம ரூபத்துடன் காணப்படும் அனைத்தும் பிரம்மமே. ஆனால் கற்பனையில் பதிந்த வேறுபாடுகள் அனைத்தும் அடிப்படையிலேயே தவறானவை. பிரம்மம் ஒன்றே சத்தியம்.

கள்குடம் ஒன்றில் ஆகாயம் பிரதிபலிக்கலாம். அந்தக் கள்ளால் ஆகாயத்துக்கு போதை ஏறிவிடாது; அதைப் போலவே உடல் எனும் கவசத்துக்குள் எந்த பாதிப்புக்கும் ஆளாகாமல் தூய்மையான ஆன்மா வசிக்கிறது. நல்லதோ, கெட்டதோ, நியாயமானதோ அநியாயமானதோ, வினை எதுவாக இருப்பினும் அதன் விளைவு உடலில் பதிகிறதே ஒழிய, அந்தர்யாமியான ஆன்மாவை ( சாட்சியாகப் பார்ப்பவனை) அது பாதிப்பதில்லை.

அப்படிப்பட்ட அனுபவ ஞானம் உதயாகும்போது ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் ஆகிய மூவகைக் கர்ம இருளும் பறந்து விடுகின்றன. ஆம்: பிராரப்த கர்மாவைக் கூட வெல்ல முடியும். ஏனெனில் இறைவனின் சங்கல்பம் சர்வ வல்லமையுள்ளது; அந்த சர்வ வல்லமையின் சங்கல்பத்துக்கு எல்லையோ விதிவிலக்கோ இல்லை. எனவே சாதனை மூலம் இறைவனின் சங்கல்பத்தைப் பெற பாடுபடுங்கள்; அந்த சங்கல்ப பலத்துடன் நீங்கள் பிராரப்தத்தையும் வெல்ல முடியும். எக்காரணத்தை முன்னிட்டும் மனந்தளர்ந்திட வேண்டாம்.

இவ்வுலகின் துயர்களும், வேதனைகளும் தற்காலிகமானவை. மாயமானவை. இந்த மாபெரும் உண்மையை மனதில் அழுத்தமாகப் பதியுங்கள், சாதனை (பக்தி மார்க்கம்) வழியில் நெஞ்சுரத்துடன் நிமிர்ந்து நடங்கள்.